முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சுந்தரமூர்த்தி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.04.2019, வியாழக்கிழமை

1. **தரும சக்தியே அரங்கராசா**
**தரணி காத்திட தன் தவபலத்தை**
**ஆறுமுக அவதாரமாகக் கொண்ட**
**அண்ணலே வள்ளலே தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிக்க **விளம்பி சேல் திங்கள்**
**ஆசிபட மூவேழு திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 21ம் நாள் 04.04.2019, வியாழக்கிழமை)**
**அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி**
3. **ஆசியை சுந்தரமூர்த்தி யானும்**
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிபட அரங்கனை நோக்கிவர
அகிலத்தவர்கள் நன்மைகள் அடைவர்
4. அடையவே அரங்க ஞானியரின்
அருளுபதேசங்களை ஏற்றுவர
தடை வெல்லும் தருமத்தை செய்துவர
தன்னார்வ தொண்டுகளை பெருக்கி
5. பெருக்கி சுத்த சன்மார்க்க வழியை
பின்பற்றி யாவரும் தொடரவே
கருத்தாக சகல வகைதனிலும்
கந்தவேலன் அருளாசி பெருகி
6. பெருகியே உலக மக்களுக்கு
பேரிடர் பிரச்சனை என்பதில்லா
ஆறுதலும் மாறுதலும் கண்டு
அகிலமே அமைதி நிலை காணும்
7. காணவே மக்கள் சக்தி பலம்
கந்தவேலன் வழிபாட்டிலிருக்கவே
ஞானவான்களை தேர்ந்தெடுக்கும்
நல்சிந்தை தெளிவும் கண்டு
8. கண்டுமே மக்கள் அனைவரும்
கடமை கண்ணியம் தறவாத
தொண்டர்கள் உண்மை மாந்தர்களாகி
தேசிகன் அருள்மிகுந்து வாழ்வர்
9. வாழ்வினில் முழுமதி காலம்தனில்
வழுவாது பூசை கலந்துமே
ஊழ் வெல்லும்படியான தருமத்தின்
உயர்வான அருளமுதை உண்டு
10. உண்டுமே அரங்கமகான் தனை
உயர்வான குருவாக ஏற்று

தொண்டு வழி தொடர்ந்து நன்கு
தொண்டர்களாகி வருகவே

11. வருகவே ஆளுமை சிறப்பாய்
வடிவேலன் ஆட்சியாக மாறும்
ஆறுமுகன் தலைமைக்கு வரும்
அறிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

தருமத்தின் சக்தி வடிவமாக எல்லையில்லா தருமங்கள் செய்து தருமத்தின் தலைவனாக இவ்வுலகினில் வந்திட்ட அரங்கமகாதேசிகனே தாம் செய்த தவபலத்தை எல்லாம் இவ்வுலகைக் காத்திடவே தர்மபலமாக மாற்றி முருகப்பெருமானின் அவதாரமாக வள்ளல் ஞானியாக அவதரித்த அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 21ம் நாள் 04.04.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சுந்தரமூர்த்தி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுந்தரமூர்த்தி.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து அருளாசிகளை பெறுகின்ற நோக்கில் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து அரங்கன் ஆசிகளைப் பெறுவோர் பலவிதமான நன்மைகளை அடைந்து சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் உபதேசங்களை ஏற்றுக் கொண்டு அரங்கரின் உபதேசப்படி நடந்து வருவதுடன் எல்லா தடைகளையும் வெல்லும் சக்திமிக்க தருமங்களை செய்து வருவதுடன் தன்னார்வமாய் உலக உயிர்களுக்கு தொண்டுகளைச் செய்து வருவதுடன் அரங்கன் கூறும் தூயநெறிக் கொள்கையான சுத்த சன்மார்க்கத்தை வாழ்வின் கடைப்பிடித்து வர வேண்டும். கருத்துடன் பயபக்தியுடன் ஞானத்தலைவன் முருகப்பெருமானை தலைவனாக ஏற்றுக் கொண்டு பூஜைகள் செய்து வர, எல்லா விதங்களிலும் முருகப்பெருமானின் அருளாசிகள் அவர்களுக்கு அதிகமாக கிடைத்து இயற்கை பேரிடர்களால் துன்பம் ஏதும் நேராமல் காப்பை பெறுவதுடன் பிரச்சனைகள் ஏதும் இல்லாத வாழ்வை நல்ல மாற்றங்களை உடையதும் ஆறுதலுமான வாழ்வினை வாழ்ந்து சிறப்பர். இந்த உலகமே இவ்விதம் செயல்பட உலகினில் இயற்கை பேரிடர்கள் நீங்கி உலகமே அமைதியான பிரச்சனைகள் இல்லாத நல்லுலகமாக ஆகி சிறப்படையும்.

உலக மக்களுக்கு வினையை வெல்லும் சக்தி, துன்பங்களை வெல்லும் சக்தியான முருகப்பெருமானை வழிபாடுகளைச் செய்து பெறுகின்ற அருளில் உள்ளது. ஆகவே மக்கள் முருகப்பெருமானை தவறாது வழிபாடுகள் செய்து வர, மக்களின் சக்திபலம் பெருகிடும். அவர்களுக்கு நன்மை தரும் நன்மக்களை அறிந்து கொள்ளக் கூடிய அறிவு தெளிவு உண்டாகி ஆட்சி பொறுப்பிற்கு பண்புள்ள ஞானவான்களை தேர்ந்தெடுக்கும் நல்சிந்தையும் தெளிவும் உண்டாகி மக்கள் அனைவரும் கடமை உணர்ச்சியும், கண்ணியம் தவறாத உண்மையுடன் வாழும் மக்களாகி ஞானதேசிகன் அரங்கரின் அருளாசிகளைப் பெற்று அருள் மிகுந்த வாழ்வினை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

உலக நலன் கருதி ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தினிலே நடத்துகின்ற ஞானியர் சிறப்பு ஞானபூஜைகளில் தவறாது கலந்து அதுசமயம் ஓங்காரக்குடிலினில் நடக்கின்ற ஊழ் வெல்லும் சக்திமிக்க அரங்கனின் தருமத்தில் அளிக்கப்படும் அருளாசிமிக்க உணவினை உண்டு, அரங்கனை பயபக்தியுடன் பணிந்து அரங்கமகானை குலகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கனைப் பின்தொடர்ந்து அரங்கர் ஆற்றும் தானதரும பணிகளிலே தளராது தொண்டுகளைச் செய்து தொண்டர்களாகி அரங்கமகானை பின்தொடர்ந்து வரவர, உலகினில் கலியுகத்தினில் உயர்வான நல்மாற்றங்கள் உருவாகி நல்லாட்சி அமைந்து சிறப்பான ஆட்சியை தருபவர்களாக அரங்கனை பின்தொடரும் தொண்டர்கள் மாறி இவ்வுலகினில் ஞானிகள் விரும்பிய ஞானஆட்சி முருகப்பெருமான் தலைமையில் உருவாகும். உலகமே முருகப்பெருமானின் தலைமையின் கீழ் ஒன்றிணைந்து ஒன்றுபட்ட உலகமாக ஞானயுகமாக ஆகிடும் எனக் கூறுகிறார் மகான் சுந்தரமூர்த்தி.

–சுபம்–